# எட்டரை அடி உயர பட்டறை!



**1949**-ல் துவங்கப்பட்டு பவள விழா ஆண்டை நோக்கி வீறுநடை போடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணிவேர் பேரறிஞர் அண்ணா எனில்,

அதன் அடிமரப் பெருங்கனத் தோற்றம் முத்தமிழறிஞர் கலைஞர் எனில்,

அன்றந்த ஆணிவேரையும் அடிமரப் பெருங்கனத்தையும் தன் உயர்ந்த கிளை மலர்களைக் கொண்டு ஓயாது கவரி வீசி ‘ஆகுக, ஆகுக’ என இளைப்பாற்றி வைத்த பெருமையும் பாங்கும் போற்றுதலுக்குரிய இனமானப் பேராசிரியர் அன்பழகனார் அவர்களையே சாரும் என்கிறது திராவிட பேரியக்கத்தின் நெடிய வரலாறு !

அந்தப் பெருமகனுக்குத்தான் பேராசிரியருக்குத்தான் காட்டூர் கிராமத்தில் உதித்த அந்த ஆறடி உயர தமிழ்க் காவலனுக்குத்தான் - எட்டரை அடியில் நிமிர்ந்ததொரு சிலை கண்டு நெகிழ்ந்தார் மரியாதைக்குரிய நமது முதலமைச்சர் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின்.

பேராசிரியரின் நூற்றாண்டு விழா துவக்கத்தில், திரண்ட நன்றிக் கடனோடு அவரை ‘பெரியப்பா, பெரியப்பா’ என பலமுறை விளித்துக் கொண்டாடினார் முதல்வர் ஸ்டாலின் என்றால் அதற்கு காரணம் உண்டு.

பலரும் பலபடப் பேசி நின்ற அந்த நாளில் ஸ்டாலின் எனும் அந்த ஆகச் சிறந்த தலைவரை தனது அரசியல் அனுபவ நுட்பறிவின் வழியே முதன் முதலில் அடையாளம் கண்டு அங்கீகரித்து நின்றவர் பேராசிரியப் பெருந்தகைதான் !

ஆம், ‘கலைஞருக்கு மட்டுமல்ல எனக்கும் ஸ்டாலின்தான் வாரிசு. அடுத்த தலைமுறையை பாதுகாக்க வேண்டிய கடமை அவருக்கு உண்டு’ என அன்றே சொன்னவர் பேராசிரியப் பெருந்தகை.

இறுதியாக பேசிய ஈரோட்டு திமுக மண்டல மாநாட்டிலும் கூட இருமிக் கொண்டே அவர் அதனைத்தான் வலியுறுத்திச் சென்றார்.

கலைஞரது அரசியல் வாழ்வில் எத்துனையோ பேர் இடையிடையே கருத்து வேறுபாடு கொண்டு விலகிச் சென்றாலும் கூட, ஏறத்தாழ 75 ஆண்டுக் காலம் அவரோடு ஆழ்ந்த நட்பு பாராட்டி இழைந்திருந்தவர் இனமானப் பேராசிரியர் மட்டும்தான்.

இனமானப் பேராசிரியர் கலைஞர் மேல் கொண்டிருந்த ஆழமான நட்பை பாசத்தை உற்று நோக்க நோக்க கம்ப நாட்டாழ்வார் வேட்டுவ குகனது பாத்திரத்தின் மேல் ஏற்றிச் சொன்ன அந்த இரண்டு வரிகள்தான் எனது நினைவிலாடி நெக்கூருகச் செய்கிறது .

**தோழமை என்றவர் சொல்லிய**
**சொல்ஒரு சொல்லன்றோ !?**
**ஏழைமை வேடன் இறந்திலன்**
**என்றெனை ஏசாரோ !?**

ஆம், அரசியல் நட்புக்கு ஆகச் சிறந்த உதாரணமாகி நின்றவர் பேராசிரியர் மட்டுமே !

கொண்ட நண்பர்களிடத்தில் பாசம் செலுத்துவதில் பேராசிரியருக்கு நிகர் அவரே ! எனது தகப்பனார் ஓவியப்பெருந்தகை கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்களிடத்தில் பேராசிரியப் பெருந்தகை பாராட்டிய அன்பு மிகப் பெரிது.



எனது தந்தையாரின் பளபளக்கும் வெற்றிலைப் பாக்கு பெட்டியைக் கண்டால் பேராசிரியர் குதூகலமாகி விடுவாராம். ‘தூரிகை பிடிக்கும் உங்கள் கரத்தில் கொஞ்சம் துளிர் வெற்றிலையை கிள்ளிக் கொடுங்களேன்’ என்று கேட்டு வாங்கி போட்டுக் கொள்வாராம்.

“உங்கள் தாய்மொழி தெலுங்கு. என் தாய்மொழி தமிழ். வயதில் மூத்தவர் தான் என்றாலும் மொழி வழியே பார்த்தால் நீங்கள் எனக்கு இளையவர்தான்...” எனக் கிண்டலடிப்பாராம்.

பேராசிரியரின் மதிக் கூர்மை மிகப் பெரிது என எனது தந்தையார் வியந்து சொல்லக் கேட்டதுண்டு.

பேராசிரியரின் மனைவியார் மறைந்ததோர் நாளில் துக்கம் அனுசரிக்கச் சென்ற எனது தந்தையை கட்டி அணைத்துக் கொண்ட பேராசிரியர் ஒரு சூஃபி ஞானியைப் போல இப்படிச் சொன்னாராம்...

‘தயவுசெய்து நீங்கள் எனக்கு ஆறுதல் சொல்லி விடாதீர்கள். உங்களைப் போன்றவர்களும் எனக்கு ஆறுதல் சொல்லிவிட்டால், பிறகு என் துக்கத்தை வேறெங்குதான் சென்று தொலைப்பேன்.”

ஆம், நிச்சலனமாக இருப்பதுதான் ஆகப் பெரும் ஒப்பாரியாம் !

அப்படிச் சொன்ன அதே பேராசிரியர்தான் எனது தந்தையார் மறைந்த அந்த நாளில், திருவல்லிக்கேணி ஓட்டு வீட்டு மாடியில் ‘ஓ’ வென கதறி அழுதார் !

சுடுகாட்டு ஏற்பாடுகளில் இருந்தவன் அமைச்சர் வந்திருக்கிறார் என்றதும், வெட்டியான் நண்பன் சம்பத்தின் சைக்கிளை வாங்கிக் கொண்டு போலீஸ் தடைகளைத் தாண்டி விரைந்து வந்தேன். அந்த வராண்டாவில் ஓங்கி நின்றிருந்தவர் எனது சின்னஞ்சிறு முகத்தை தன் படர்ந்த இரு கரங்களால் ஆதூரமாக அள்ளிக் கொண்டார். அழுதேன்.

‘அழக்கூடாது தம்பி ! அழுதா, உங்கப்பாவுக்கு பிடிக்காதில்லையா. உறுதியா இருக்கணும். புரியுதா...!? ’ என்றபடி தலைகோதி அணைத்தார்.



தன்னைப் பேட்டி கண்ட தினத்தந்தியிடம், ‘அன்றொருநாள் பாரதியார் மறைந்த இதே வீதியில் எங்கள் திராவிடச் சூரியன் மறையக் கண்டோமே ‘ எனக் கலங்கியபடி மெல்லப் படியிறங்கிப் போனார் !

அந்தப் பாசம்தான் பேராசிரியரின் பேரடையாளம் !

இதோ, பேராசிரியரின் நெடுஞ்சிலைக்கு முன் நிற்கிறேன்.

அது, சிலையல்ல, அல்ல !

எட்டரை அடி உயர திராவிடப் பட்டறை என்றே கொள்கிறேன் !

வலது தோள் துண்டை பற்றியபடி இருக்கும் அந்த வெங்கலக் கரம் யாருமறியாததொரு மாயகணத்தில் சற்றே நீண்டு எனது இடது கன்னத்தை தட்டிக் கொடுத்து விடாதா எனும் நப்பாசையோடு மயங்குகிறேன் !




**வே.ஸ்ரீராம் சர்மா**
*எழுத்தாளர்*


**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

அறிவாசானின் திருக்குறளை ஆயாசத்தோடு நோகிறேன் !

திருவாரூர் மண்ணில்
தாய் சுவர்ணாம்பாள்
வயிற்றிலுதித்த பெருந்தகையே
ஐயா, ராமையா !
மீ ண் டெ ழு ந் து ராவையா !!

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

---

## அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியர் பேச்சுப் போட்டி - பரிசளிப்பு விழா!

# மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - விழாத் தலைமையேற்று பரிசுகள் வழங்குகிறார்!

### உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்பு! பீட்டர் அல்போன்ஸ் வரவேற்புரை!

சென்னை, ஆக. 20

தமிழ்நாடு அரசு மாநில சிறுபான்மை யினர் ஆணையம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி 2023-ன் பரிசளிப்பு விழா 23.8.2023, புதன்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை - கோயம்பேடு தூய தாமஸ் கல்லூரி அரங்கில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் - தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் வரவேற்புரையாற்றுகிறார்.

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ். செஞ்சி மஸ்தான் வாழ்த்துரை வழங்குகிறார்.

இவ்விழாவிற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் - முனைவர் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், முன்னாள் எம்.பி., வெ.அழகிரிசாமி, பேராசிரியர் முனைவர் ஜெ.ஹாஜா கனி, எஸ்.டி.நெடுஞ்செழியன் ஆகியோர் கௌரவிக்கப்படுகின்றனர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் நன்றி கூறுகிறார்.

“தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘தலைநிமிரும் தமிழகம்’ என்ற தமிழகத்தின் விடியலுக்கான முழக்கத்தை தமிழகக் கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்க்க தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் தமிழகத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் மாணவர்களுக்காக தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டிகளை நடத்தி முடித்துள்ளது.

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு அப்பால், மாணவர்கள் அறிந்தும் உணர்ந்தும் தெளிய வேண்டிய உன்னத விழுமியங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கவும், தமிழ்ச் சமூகத்தின் தனித்துவமான பண்பாடுகளை, பெருமைகளை, இலக்கியங்களை, கலைகளை, வரலாற்றை மாணவர்கள் அறிந்துகொள்ளும் விதமாக தமிழகத்தின் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் 4,000 மாணவ மற்றும் மாணவியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தமிழுக்கும், ஆங்கிலத்துக்கும் தனித்தனியாக மூன்று பரிசுகளும் (ரூ.20,000, ரூ.10,000, ரூ.5000) மாநில அளவில் நடந்த போட்டிகளில் தமிழுக்கும், ஆங்கிலத்திற்கும் தனித்தனியாக மூன்று பரிசுகளும (ரூ.1,00,000, ரூ.50,000, ரூ.25,000) சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் 228 மாணவ மற்றும் மாணவியர்களும், மாநில அளவில் 6 மாணவ மற்றும் மாணவியர்களும் பரிசுகளைப் பெறுகிறார்கள்.

சமூகநீதி, மத நல்லிணக்கம், மனிதநேயம், சுயமரியாதை அனைவருக்குமான வளர்ச்சி என்று தன் வாழ்நாள் முழுவதும் அதற்காகவே வாழ்ந்த தலைவர் கலைஞர் அவர்களின் அடியொற்றி தடம் பிறழாமல் பயணிக்கும் தமிழக முதலமைச்சரின் பொற்கரங்களால் இம்மாணவர்கள் பரிசுகள் பெறுவது மிகப்பெரும் பேறு.

இப்போட்டிகளை நடத்துவதற்கான அனுமதியினையும், வழிகாட்டுதல்களையும் அளித்து பரிசுகள் வழங்கி மாணவச் செல்வங்களை பெருமைப்படுத்தவிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றி!” என தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.



தமிழனத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருத்தணி ஒன்றியம் தாடூர் கிராமத்தில் வருமுன் காப்போம் முகாம் நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் மருத்துவ முகாமை துவக்கி வைத்து மக்களை தேடி மருத்துவம் மூலம் பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களை மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு தொழு நோயாகளிக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மருத்துவ துணை இயக்குனர் ஜவஹர்லால், என்.கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## நீட் திணிப்பை கண்டித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் உண்ணாவிரத அறப்போராட்டம்!

# சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

*சென்னை, ஆக 20-*

நீட் திணிப்பைக் கண்டித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஒன்றிய அரசு, ஆளுநரைக் கண்டித்து நடைபெறும் மாபெரும் உண்ணாவிரத அறப்போரில் கலந்து கொள்ளும்படி மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க் கொல்லியாக நீட் தேர்வு மாறியிருக்கிறது. இவற்றிற்கு காரணமான ஒன்றிய அரசு, துணைபோன முந்தைய அதிமுக அரசு மற்றும் தமிழ்நாட்டு ஆளுநரைக் கண்டித்து சென்னை மேற்கு மாவட்டத்தில் அமைந்துள்ள வள்ளுவர்கோட்டம் அருகில் இன்று (20.08.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது. இந்த அறப்போர் உண்ணாவிரதத்தை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைக்கிறார்.



இந்த நிகழ்வுக்கு கழக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையின்படி கழக நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகி கள், மாநில நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட / பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாக முகவர்கள், கழகத் தொண்டர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நே.சிற்றரசு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டிய

# துணை நிலை ஆளுநர் தமிழ்நாடு அரசியல் பற்றி பேசுவதா?

### காரைக்கால் கழக அமைப்பாளர் அறிக்கை

*காரைக்கால், ஆக. 20-*

அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டிய புதுச்சேரி துணை நிலை ஆளுநர், தமிழ்நாடு அரசியல் பற்றி பேசுவதா என்று குறிப்பிட்டு காரைக்கால் கழக அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:-



துணை நிலை ஆளுநர் அவர்கள் அளித்த விருந்தில் திமுக கலந்து கொள்ளாமல் இருந்தது எதிர்க்கட்சிகளுக்கு தான் நஷ்டம் என்பதைப் போல அவர் குறிப்பிட்டு இருக்கிறார். என்ன நஷ்டம் என்பது எங்களுக்கு தெரியவில்லை?. டெல்லியில் ஆளுகிற ஒரு யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு ஆட்சி கோரும் உரிமைகளை தடுத்து ஒரு ஜனநாயக படுகொலையை செய்துவிட்டு இங்கே சுதந்திர தின விழாவை கொண்டாடுவது என்பது ஒரு மனிதனை கொன்றுவிட்டு அந்த பிணத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு இனிப்பு சாப்பிடுவதற்கு சமம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் உரிமையை பறிப்பது என்பது எவ்வளவு பெரிய கொடூர செயல் என்பதை துணைநிலை ஆளுநர் உணர வேண்டும். அதே நிலை தான் புதுச்சேரி மாநிலத்திலும் ஒரு சட்டமன்றம் கூடி 30 சட்டமன்ற உறுப்பினர்களும் புதுச்சேரி மாநிலத்திற்கு மாநில அந்தஸ்து வேண்டும் என்று கோருகிற அந்த தீர்மானத்தை அனுப்பாமல் இருந்து தமிழகத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்ட பிறகு அவர் எந்தவிதமான தன்னுடைய குறிப்புகளையும் எழுதாமல் அப்படியே டெல்லிக்கு அனுப்பி இருப்பதாக நான் செய்திகளை அறிகிறேன்.

ஒரு சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை அனுப்புவதற்கு கூட தயங்குகிறார் என்றால் இது ஜனநாயகத்தை மீறிய செயல் அல்லவா? இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று தெரியவில்லை. நான் தமிழ்நாடு மண்ணில் பிறந்த காரணத்தினால் அந்த மாநில அரசியலைப் பற்றி பேசுகிறேன் என்று கூறுகிறார்.

எங்களுடைய புதுச்சேரி மாநிலத்தில் நாங்கள் வசிக்கிற காரைக்கால் பகுதியில் பிறந்தவர் தான் மறைந்த பாரூக் மரைக்காயர் , அவர் இரண்டு மாநிலத்தினுடைய (ஜார்க்கண்ட், கேரளம்) கவர்னராக இருந்திருக்கிறார். அவரை தமிழ்நாடு அரசியல் குறிப்பாக புதுச்சேரி அரசியல் தொடர்பான கேள்விகளை பத்திரிக்கையாளர்கள் கேட்கின்ற பொழுது , நான் அதற்கெல்லாம் பதில் சொல்ல கூடிய நிலையில் இல்லை. காரணம் நான் வகிக்கக்கூடிய பொறுப்பு அப்படி . நான் வகிக்கின்ற பொறுப்பின் மாண்பை காக்க வேண்டும் என்று அந்த மாண்பையும் காப்பாற்றியவர், தனி மனித பண்பாட்டுக்குரியவர் மரியாதைக்குரிய பாரூக் மரைக்காயர்

அதேபோல நீங்களும் இருந்தால் நாங்களும் பேசப் போவதில்லை. எனவே நீங்களும் உங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து நீங்கள் செயல்பட்டால் உங்களுக்கு உரிய அங்கீகாரத்தை நாங்களும் கொடுக்க தயார். இன்னும் சொல்லப்போனால் ஒரு அரசியல்வாதியாக இருக்கக்கூடிய புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள் கூட எங்கள் தலைவர் தளபதி அவர்களின் ஆட்சியை ஒரு வார்த்தை கூட குறை சொல்லியதில்லை காரணம் அவர் தளபதியின் ஆட்சியை உணர்ந்து இருக்கிறார்.

அப்படிப்பட்ட முதலமைச்சரே விமர்சிக்க முடியாத ஆட்சி அங்கே நடக்கின்ற பொழுது அரசியலுக்கு அப்பாற்பட்ட நிர்வாகத்தை செய்யக்கூடிய நீங்கள் வாய் திறந்து எங்களுடைய ஆட்சியை விமர்சனம் செய்கின்ற பொழுது நாங்கள் எப்படி பொறுத்துக் கொள்வோம் என்பதை மட்டும்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் நீங்கள் தவிர்த்துக் கொள்வது உங்களுக்கும் நீங்கள் வைக்கக்கூடிய பொறுப்பிற்கும் அழகு என்பதை நாங்கள் கண்ணியத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம் .

இவ்வாறு நாஜிம் தனது அறிக்கையில் தெரிவித்